# எல்லாவிற்றிற்கும் மேலாக உயர்ந்தவர்:

PR.K.JOSEPH

**எபேசியர்–1: 23**

*எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

இயேசு கிறிஸ்துவின் **நாமம்** எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்ந்த நாமமாக இருக்கிறது. அந்த நாமத்தை உடைய **இயேசு** எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டவராக இருக்கிறார். இப்படிப்பட்ட கனம் அவருக்கு எப்படி வந்தது, அது யாரால் வந்தது என்பதைக் குறித்த சத்தியத்தை தேவன் நமக்குக் கற்றுக்கொடுப்பாராக. இதைக் குறித்து நாம் அறிந்து கொள்வதன் நோக்கம் என்னவென்றால், இயேசுவின் மகத்துவத்தை அறிந்து அவரை நேசித்து ஆராதிக்கவும், நம்முடைய தனிப்பட்ட வாழ்விற்கென்று தேவன் வைத்திருக்கும் நித்திய மேன்மையை நாம் அடைந்திட நாம் என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்திடவும் இது வழிநடத்திச் செல்லும்.

பிலிப்பியர்–2ஆம் அதிகாரத்தில் இயேசு யாராக இருக்கிறார், அவர் பூமிக்கு வந்தபோது எப்படிப்பட்டவராக வந்தார் என்பதைக் குறித்த முக்கிய உண்மையைப் பார்க்கிறோம்.
பிலிப்பியர்–2: 5–8 *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*

‘‘இயேசு’’ தேவனுடைய குமாரன் ஆவார். அதாவது திரித்துவத்தில் இரண்டாவது நபராக, வேறு வார்த்தையில் சொன்னால் அவர் தேவனாகவே இருக்கிறார். அப்படிப்பட்டவர் பாவத்தினால் விழுந்துபோன, தேவனுடைய சாயலை இழந்துபோன, குறைவுபட்ட மனிதனின் சாயலை ஏற்றுக்கொண்டு பூமிக்கு வந்தார். தம்மையே வெறுமையாக்கி, தனக்கானவைகளை நாடாமல் மனுக்குலத்திற்குரியவைகளை நாடி நம்மை மீட்பதற்காக, அடிமையின் ரூபமெடுத்தார். மரணபரியந்தம் கீழ்படிந்து தம்மைத்தாமே தாழ்த்தினார். **பிறர்** அவரைத் தாழ்த்தவில்லை, **பிதா** அவரைத் தாழ்த்தவில்லை, **பிசாசு** அவரைத் தாழ்த்தவில்லை, **பிரச்சினைகள்** அவரைத் தாழ்த்தவில்லை மாறாக அவரே தன்னையே தாழ்த்தினார்– இதுதான் உண்மையான தாழ்மை. தாம் பூமியில் வாழ்ந்தபோது எதைப் போதித்தாரோ அதை அப்படியே தமது வாழ்க்கையில் வாழ்கிறவராக அவர் காணப்பட்டார். பரிசேய சதுசேயருடைய போதகத்திற்கும் இயேசுவின் போதகத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு காணப்பட்டது. அவர்கள் போதித்தார்கள் ஆனால் அதின்படி வாழவில்லை, இவரோ தமது போதனையை வாழ்ந்து காட்டினார்.

**உதாரணத்திற்கு.**

- மன்னிக்கும்படி இயேசு போதித்தாரா? ஆம். அவர் மன்னிக்கிறவராக வாழ்ந்தாரா?
- அன்புகூரும்படி இயேசு போதித்தாரா? அவர் அன்புள்ளவராக வாழ்ந்தாரா?
- இரக்கம் காட்டும்படி இயேசு போதித்தாரா? அவர் இரக்கமுள்ளவராக இருந்தாரா?
- நீதியைக் குறித்து இயேசு போதித்தாரா? அவர் நீதியை நிலைநாட்டினாரா?
- பரிசுத்தத்தைக் குறித்து இயேசு போதித்தாரா? அவர் பரித்தமாக வாழ்ந்தாரா?
- கீழ்ப்படிதலைக் குறித்து இயேசு போதித்தாரா? அவர் கீழ்ப்படிதலுள்ளவராக வாழ்ந்தாரா?
- ஜெபத்தைக் குறித்து இயேசு போதித்தாரா? அவர் ஜெபிக்கிறவராக வாழ்ந்தாரா?

- ❖ நித்தியத்தைக் குறித்து இயேசு போதித்தாரா? அவர் நித்தியத்தை முன்நிறுத்தி வாழ்ந்தாரா?
- ❖ பாடுகளைக் குறித்து இயேசு போதித்தாரா? தன்வாழ்வில் பாடுகளின் பாதையில் அவர் சென்றாரா?
- ❖ பொறுமையைக் குறித்து, தாழ்மையைக் குறித்து சகிப்புத்தன்மையைக் குறித்து, விட்டுக்கொடுத்தலைக் குறித்து இயேசு போதித்தாரா? அதின்படி அவர் வாழ்ந்தாரா?

பதில் என்னவென்றால் ஆம் என்பதே. இயேசுவினிடத்தில் நாம் பார்க்கு:ம் விசேஷம் என்னவென்றால் அவரிடத்தில் வார்த்தையும் வாழ்க்கையும் ஒன்றாக இருந்தது. தாம் வாழ்வதைப் பேசினார், தாம் பேசுவதை வாழ்ந்தார்.

**எல்லாவற்றிற்கும் மேலாக:**

எபேசியர்–1: 20 எவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. *எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக.*

துரைத்தனம், அதிகாரம், வல்லமை என்பது சாத்தானுடைய அரசாங்க அமைப்பில் உள்ள ஆவிகள் மற்றும் ஆட்களின் வகைகளைக் குறிக்கிறது. சாத்தானுடைய அரசாங்கத்தில் விழுந்துபோன தூதர்களும், அசுத்த ஆவிகளும், அறிந்தே தங்களைத் துன்மார்க்கத்திற்கு விற்றுப்போட்ட மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு அனுபவமிக்கவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு பழமை வாய்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு வலிமை வாய்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரும் திரளானவர்களாக இருந்தாலும் சரி, இயேசுவுக்கு முன்னால் இவைகள் எல்லாம் கீழானவைகளாவே இருக்கின்றன. நம்முடைய இயேசு இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் உயர்ந்தவராக இருக்கிறார்.

**நமக்குரிய நற்செய்தி:**

பல மிரட்டுதல்களையும், தடைகளையும், போராட்டங்களையும், சாத்தானுடைய ராஜ்யம் நமக்கு எதிராக எழும்பச் செய்கிறபோது நாம் பயப்படத் தேவையில்லை, பின்வாங்கத் தேவையில்லை, சோர்ந்துபோய் கலங்கிடத் தேவையில்லை. காரணம் நம்மோடுகூட ஒருவர் இருக்கிறார். அவர் எல்லாவற்றிற்கும் மேலானவராக இருக்கிறார். சாத்தானுடைய செயல்கள் எல்லாம் அவருக்கு முன்பாக ஒன்றுமில்லாமல் அழிக்கப்பட்டுப் போகும். நாம் அவருடையவர்களாக இருப்பதால் நம்மைப் பாதுகாப்பதிலும், நம்மை விடுவிப்பதிலும், நம்மை நேர்த்தியாக நடத்திச் செல்வதிலும் அவர் அதிகக் கரிசனையுள்ளவராக இருக்கிறார். தேவன் சொன்னார்: ''*உன்னைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறான். உனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும்*''.

**தாழ்மை தந்த மேன்மை:**

பிலிப்பியர்–2: 9–11 *ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.* ''ஆதலால்'' என்ற வார்த்தையின் மூலம் எல்லாவற்றிற்கும் இயேசு மேலாக உயர்த்தப்பட்டதற்கான காரணத்தைக் குறித்தும், தேவனே அந்த மேன்மையை அவருக்குக் கொடுத்தார் என்பதைக் குறித்தும் நாம் அறிந்துகொள்கிறோம். 'ஆதலால்' என்பதற்கு **இதினிமித்தமாக** என்ற விளக்கத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம். எதினிமித்தமாக என்பதற்கான பதிலை நாம் ஏற்கெனவே வாசித்த பிலிப்பியர்–2: 5–8 வசனங்கள் கொடுக்கிறது. தம்மைத் தாமே தாழ்த்தினதினிமித்தம்

தேவன் அவரை உயர்த்தினார். இயேசு கிறிஸ்துவின் முக்கியமான வாழ்க்கை முறையாகவும், முக்கியமான போதனையாகவும் 'தாழ்மை' இருந்தது. பணிவிடை செய்கிற தலைவராக இயேசு வாழ்ந்தார். He was a Leader, but He was a Servant-Leader தலைவராக இருந்து சீடர்களுடைய கால்களைக் கழுவினார், சிறுபிள்ளைகளையும் அன்போடு அணைத்து ஆசீர்வதித்தார். "தீட்டானவர்கள்" என்று தள்ளப்பட்டவர்களையும் தொட்டு சுகமாக்கினார், "பாவிகள்" என்று அற்பமாக எண்ணப்பட்டவர்களை நேசித்து ஏற்றுக்கொண்டார். "*தாழ்மையுள்ளவர்கள் உயர்த்தப்படுவார்கள், தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கப்படும், மனத்தாழ்மையை என்னிடம் வந்து கற்றுக்கொள்ளுங்கள்*" என்று இயேசு போதித்தார். "கிறிஸ்தவம்" என்றாலே தாழ்மையின் அடையாளத்தை வெளிப்படுத்துகிற மார்க்கம் ஆகும். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்தவர்களாக இருக்க வேண்டும். உலகத்திலே மிகவும் தாழ்மையாக இருக்க வேண்டியவர்கள் யாரென்றால் கிறிஸ்தவர்கள் தான். கிறிஸ்தவர்களுக்குள் பெருமை என்பது இருக்கவே கூடாது. நமக்கும் பெருமைக்கும் சம்பந்தமே இல்லை. பெருமை நமக்கு உரியது அல்ல. நம்முடைய மேன்மை நம்மால் வரக்கூடாது, பிறரால் வரக்கூடாது, சாத்தானாலும் வரக்கூடாது. தேவனே நம்மை மேன்மைப்படுத்த வேண்டும். பரலோக தேவன்தானே இயேசுவை மேன்மைப்படுத்தினார்! நம்முடைய மேன்மையும் அவராலே வருவதாக. தாழ்மைதான் தேவனிடத்திலிருந்து மேன்மையைப் பெற்றுக்கொடுக்கும். தேவன் கொடுக்கும் மேன்மை நிரந்தரமானதாக, நித்தியத்திற்குரியதாக இருக்கும்.

லூக்கா–1: 48 *அவர் தம்முடைய அடிமையின்* ***தாழ்மையை*** *நோக்கிப்பார்த்தார், இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப்* ***பாக்கியவதி*** *என்பார்கள்.*